Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (28-5-66) இதழ் 110

பராபவ வைகாசி 15 ஸபர் 7 சனிக்கிழமை

பீடிகளில் சிறந்தது!

இறுதி வரை
இன்பமளிப்பது
முல்லா பீடிகளே

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:
முல்லா பீடி கம்பனி
கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம்.

## டில்லிக்கு இலங்கை கோஷ்டி

புதுடில்லி, மே 27

இலங்கை பாராளுமன்ற தூதுகோஷ்டி ஒன்று விரைவில் இந்தியா வரும் என டில்லியில் அறிவிக்கப்பட்டது. இதன்பின் இந்திய பாராளுமன்ற தூதுகோஷ்டி ஒன்று இலங்கைவரும்.

# மாநகரசபை நிர்வாகம் பற்றி திடீர் விசாரணை

## ஸ்தலஸ்தாபன கமிஷனர் நேரில் நடத்துகிறார்

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகம் பற்றி மாநகரசபை அங்கத்தவர் சிலரும் மற்றும் சிலரும் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. டபிள்யு. எஸ். பெர்னாண்டோ நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தினார்.**

யாழ்ப்பாண நகரமேயர் திரு. ஆ. த. துரையப்பாவுடனும் மாநகரசபைக் கமிஷனருடனும் அவர் முதலில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

1964-ம் ஆண்டு தொடக்கம் இதுவரை நடைபெற்ற மாநகரசபையின் கூட்டறிக்கைகள், கணக்கு விபரங்கள், மற்றும் ஒப்பந்தங்கள் பற்றிய விபரங்களை ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷனரும் வடபகுதி ஸ்தலஸ்தாபன சேவை உதவிக் கமிஷனர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகரும் பார்வையிட்டு ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

வட்டார வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வாறு செலவிடப்பட்டது, சேவிப்பத்திரங்கள் முறையாக பரிசீலனை செய்யப்பட்டனவா, ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷனின் அங்கீகாரமில்லாது நியமனங்கள் செய்யப்பட்டனவா? வரவு-செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்படாமலும் நிதிக் குழுவின் அங்கீகாரமில்லாமலும் பணம் செலவிடப்பட்டதா? ஆகியனபற்றி கமிஷனரும், உதவிக்கமிஷனரும் ஆராய்ந்து வருகின்றனர்.

மாநகரசபைக் கூட்டம் நடைபெறும் சபை மண்டபத்தில் இப்பரிசீலனைகள் நடைபெற்றுவருகின்றன, அங்கத்தவர் சிலரையும் கமிஷனர் விசாரிப்பாரெனத்தெரியவருகிறது.

## பல்கலைக் கழக நிர்வாகத்தில் கல்வி மந்திரியின் கட்டுப்பாடு

### மறு பரிசீலனை செய்யப்படுகிறது

கொழும்பு வெள்ளி

பல்கலைக் கழக நிர்வாகத்தில் கல்வி மந்திரியின் கட்டுப்பாடு தேவையற்றதொன்று என அரசாங்க தரப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கருதுகின்றனர்,

கடந்தவாரம் பல்கலைக் கழகம் ஆட்சியுரிமை சம்பந்தமாக கல்வி மந்திரி தெரிவித்த கருத்து இப்போது அரசாங்கதரப்பில் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

பல்கலைக் கழக விஷயத்தில் கல்வி மந்திரியின் கட்டுப்பாடு குறித்து அரசாங்க பார்லிமெண்டரி குழுக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

உயர்தரக் கல்வி போன்றவைகள் குறித்து கல்வி மந்திரியால் தயாரிக்கப்பட்ட அறிக்கை மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் குழுவில் சமர்ப்பிக்கவேண்டுமென்றும் திரு ஜி ஜி பொன்னம்பலம் கூறியுள்ளார்.

பல்கலைக் கழக விஷயத்தில் அரசியல் தலையீடான கட்டுப்பாடு காட்டப்பட்டுள்ளதென பல்கலைக் கழக ஆசிரியர் சங்கமும் அதிருப்திதெரிவித்துள்ளது.

இலங்கை பல்கலைக் கழகம் வித்தியோதயா, வித்தியாலங்கார ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களும் இவ்வாரத்தில் சந்தித்து கல்வி மந்திரியின் முடிவு குறித்து எதிர்ப்பு நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவிருக்கின்றன.

# 100 பேர் கைது

## யாழ். பொலிசாரின் திருட்டு ஒழிப்பு நடவடிக்கை

(நமது நிருபர் அரசரத்தினம்)

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாணப்பகுதியில் சென்ற சில வாரங்களாக அதிகரித்து வரும் திருடர் தொல்லையை எதிர்த்து யாழ்ப்பாணம் பொலிஸார் எடுத்துவரும் தீவிர நடவடிக்கை காரணமாக இப்பொழுது நூறு சந்தேகப் பேர்வழிகள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். சுமார் இருநூறு பேர் கைது செய்யப்பட்டனரென்றும் நூறு பேர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனரென்றும் உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பகுதியில் விரைவில் திருடர் தொல்லையை ஒழித்துக்கட்டிவிட முடியும் என்றும்அதற்கான நடவடிக்கைகள் முழுமூச்சுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள நூறுபேர்களில் பலரும், பல குற்றசம்பவங்களுக்காக நாட்டின் பல வேறு பொலிஸ் நிலையங்களால் தேடப்பட்டு வந்தவர்களென்றும் பொலிஸ் அதிகாரி கூறினார்.

நேற்று முன்தினமிரவு சுதுமலையில் ஒரு வீட்டில் சில நகைகளும் ரொக்கப் பணமும் திருட்டுப்போனதாக பொலிஸில்புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆனைக்கோட்டைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. கார்த்திகேசு தலைமையில் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து கொழும்பிலிருந்து விரல் அடையாள நிபுணர்களும் வந்துள்ளனர்,

91-வது சுவீப்

## முதல் மூன்று பரிசுகள்

மட்டக்களப்பு, வெள்ளி

இன்று இழுக்கப்பட்ட 91-வது சுவீப்பில் முக்கிய மூன்று பரிசுகளையும் பெற்ற அதிர்ஷ்ட டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 74 N 0040 |
| இரண்டாம் பரிசு | 38 L 0335 |
| மூன்றும் பரிசு | 32 R 0761 |

| | |
|---|---|
| முதலாம் பரிசு | ரூபா 1 லட்சம் |
| இரண்டாம் பரிசு | ரூபா 40.000 |
| மூன்றும் பரிசு | ரூபா 10,000 |

தலா ரூபா 2440 கொண்ட 100 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

ஜி சி ஈ சாதாரண

## பரீட்சை முடிவுகள் பதிவு சம்பந்தமாக விசாரணை

### கல்வி அமைச்சு உத்தரவு

கொழும்பு, வெள்ளி

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சி ஈ. சாதாரண பரீட்சை முடிவுகள் பதிவு செய்யப்பட்டது சம்பந்தமாக விசாரணை ஒன்றை நடத்துமாறு கல்வி அமைச்சு பரீட்சை கமிஷனருக்கு உத்தரவிட்டுள்ளது.

பெற்றோர்களும், பாடசாலை அதிபர்களும், மாணவர்களும் செய்த புகாரைத் தொடர்ந்தே கல்வி அமைச்சுஇந்தவிசாரணையை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

தேர்வில் கலந்து கொள்ளாத பாடங்களிலேயே சித்திபெற்றிருப்பதாக பரீட்சார்த்திகள் சிலரின் பரீட்சை முடிவுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இந்தப் புகார்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## லாபத்தில் பங்கு

### இன்று யாழ்ப்பாணத்தில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

இலாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்குகொடுப்பது சம்பந்தமாக ஆராய்ந்து வரும் கமிஷன் இன்று யாழ்ப்பாணம் புதிய செயலகத்தில் தனது விசாரணையை ஆரம்பிக்கவிருக்கிறது. கமிஷன் நாளையும், மறுநாளும் விசாரணையைத் தொடர்ந்து நடத்தும்.

இக்கமிஷன் அடுத்த 3, 4ந் தேதிகளில் காலி நகரமண்டபத்தில் விசாரணையை நடத்தும்.

அளவெட்டி

கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில்

7-ம் திருவிழா விஞ்ஞாபனம்

நிகழும் பராபவ வருஷம் வைகாசி மாதம் 17-ம் திகதி (30-5-66) திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு மேற்படி விழாவில் அகில இந்திய நாதஸ்வர வித்துவான் மங்களவாத்திய விஷாரத் கரவடி ஷேக் சின்னமௌலானு நாதஸ்வரம் வாசிப்பார். V. தெட்சணாமூர்த்தி, K. கணேசு, N. R. சின்னராசா தவில் வாசிப்பார்கள்.

444 7-ம் திருவிழா உபயகாரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வாழ்க்கை குறுகியது. இறைவனேடியைந்து வாழ்ந்து இக்குறுகிய வாழ்வினுல் பெரும்பயன் அடைதி நாட்கள் செல்லச் செல்ல உனதென நீ இறுகப் பற்றி நிற்கும் பொருள்களனைத்தையும் விடுத்து நீ போய்விடவேண்டிய உன் இறுதிக் காலமும் நெருங்கும். இறைவன் சிந்தனையோடு வாழும் வாழ்க்கையே உண்மையான இன்பமும், சாந்தியும் வாய்ந்த வாழ்க்கை. —சுவாமி இராமதாஸர்


# ஈழநாடு

EELANADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELANADU Jaffna Phone: 555

பராபவ ஆண்டு வைகாசி மீ 15 உ (28-5-66)


## பரீட்சை முடிவுகள்

சென்ற வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் பேர்களில் ஒரு லட்சத்து முப்பதினுயிரம் பேர்களே சித்திபெற்றிருக்கின்றனரென சமீபத்தில் வெளியான பரீட்சை முடிவுகள் தெவிக்கின்றன அதாவது ஒரு லட்சம் பரீட்சார்த்திகள் சித்தியடையவில்லை.

இதற்குக் காரணம் என்ன? கல்வியின்தரம் குறைந்துவிட்டதா? கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் திறமை குன்றிவிட்டதா? மாணவ மாணவியரின் அறிவு மழுங்கிவிட்டதா?

பரீட்சை எழுதிய நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களைப் பரிசிலனை செய்து புள்ளிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரிகள், விஞக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளைப் பார்த்து அதற்கேற்ற முறையில் புள்ளிகள் வழங்கியதாகவும் பின்னர் மீண்டும் 'கடுமையாகப் பரிசிலனை' செய்யும் பொருட்டு அவைகள் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அதாவது கல்வி இலாகாவின் விருப்பதிற்கேற்ப விடைத்தாள்கள் சரிபார்க்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதுதான் இதன் அர்த்தம்.

கல்விக்கொள்கையும் அதன் விளைவாகப் பெருகிவரும் வேலையில்லாத்திண்டாட்டமும், பல்கலைக் கழகங்களில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியும்தான் கல்வி இலாகாவின் விடைத்தாள்களை 'கடுமையாகக் கவனமாகப் பரிசிலனை செய்து புள்ளியிடவேண்டும்' என்ற உத்தரவுக்குக் காரணமாக இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இது உண்மையானுல், மாணவர்களுக்கும் பிள்ளைகளின் கல்விக்காகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு வரும் பெற்ருேருக்கும் செய்யக்கூடிய மிகப் பெரிய அநீதி இதைவிட வேறு இருக்கமுடியாது.

யாரோ செய்த தவறுகளுக்காக மாணவரும் பெற்ருேருமா தண்டனையனுபவிக்கவேண்டும்? சித்தி பெறத்தவறிய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை மீண்டும் பரிசிலனை செய்யவும் அவர்கள் மீண்டும் தாங்கள் கற்ற போதனுமொழி மூலமே பரீட்சையில் தோற்றவும் கல்வி அமைச்சு ஒழுங்குசெய்ய வேண்டும்.

## யாழ்ப்பாணத்தில் திருடர் தொல்லை

யாழ்ப்பாணப் பகுதியில் சென்ற சில வாரங்களாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. திருடர்நடமாட்டம் இப்பகுதியில் அதிகரித்துள்ளதை அறிந்த யாழ்ப்பாணம் பொலிசார் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களை எச்சரித்தனர். பொதுமக்களை விழிப்புடனிருக்குமாறு எச்சரிக்கை செய்ததற்காக பொலிசாரைப் பாராட்டவேண்டும். இதேசமயம் பொதுமக்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்று திருடர் கோஷ்டியைக் கண்டுபிடித்து அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க பொலிசார் துரித நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அவசியமாகும்.

சென்ற இரண்டு வாரங்களுக்குள் சந்தேகத்தின் மீது இருநூறு பேர் இப்பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களில் நூறு பேர் வரை பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பலர் பல்வேறு குற்றச் செயல்களுக்காக நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள பொலிஸ் நிலையங்களினுல் தேடப்பட்டு வருபவர்களென்றும் யாழ்ப்பாண பொலிஸ் அதிபர் நமது நிருபரிடம் நேற்றுத் தெரிவித்தார். விரைவில் திருடர் தொல்லையை இங்கு ஒழித்துவிட முடியுமென்றும் அவர் கூறியிருக்கிருர். இது நம்பிக்கையும் ஆறுதலுமளிப்பதாகும். இப்பகுதியில் சென்ற சில தினங்களாக அடிக்கடி மின்சார விநியோகத்தில் கோளாறு ஏற்படுகிறது. இது திருடர் பற்றி அச்சம் கொண்டுள்ள மக்களை மேலும் பீதியடையச் செய்வதாகும். திருடர் தொல்லையை ஒழிப்பதற்கு பொதுமக்கள் மட்டுமல்ல மின்சார இலாகாவும் போதிய ஒத்துழைப்பும் உதவியும் அளிக்க வேண்டும்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

விஞ்ஞானம் போகிற போக்கில் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் செல்வதற்கு முன் மனிதன் இறப்பில்லாத சிரஞ்சீவித்துவம் அடைந்து விடுவான் என்று உலகப்பிரசித்தியான அண்டவெளி ஆராய்ச்சிநிபுணர் ஆர்தர் சி. கிளாக் கூறுகிருர். பிறப்பையும் முற்ருக நிறுத்திவிடமுடியுமா? பிறந்து தொலையப்போகும் கோடானகோடி மானிடங்களை தாங்கிக்கொள்ள இம் மண்ணுலகத்தில் இடம்இராது. நிச்சயம் சந்திரனையும்வேறு கோளங்களையும் தான் தேடவேண்டும். இதில் கட்டாயம் சண்டையும் பூசலும் ஏற்படும் என்றே தோன்றுகிறது.

சரித்திர நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் நிகழுகின்றன என்று சொல்வார்களே!

வழிப்போக்கன்

# வற்ருப்பளைக்கு விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், சனி

வற்ருப்பளை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழாவை யொட்டி யாழ்ப்பாணத்திலிருந்து விசேஷ பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாத்திரிகர்களின் வசதிக்காக இலங்கை போக்குவரத்து சபை 20 புதிய பஸ்களை இங்கு விசேஷமாக வரவழைத்துள்ளது. இச்சேவைகள் நாளைக் காலை முதல் ஆரம்பமாகும் என்று அறியப்படுகிறது.

முன்னரிலும் பார்க்க இவ்வருடம் விசேஷமாக யாழ்ப்பாணம், வவனியா மற்றும் முல்லைத்தீவையும் அதை அடுத்துள்ள பகுதிகளிலிருந்தும் விசேஷ சேவைகள் ஜூன்மாதம் முதல் நடைபெறும்.

இருபது ''டாட்டா பென்ஸ்'' பஸ்கள் வரவழைக்கப் பட்டிருப்பதால் இம்முறை யாத்திரிகர்கட்கு எதுவித போக்கு வரத்து வசதியீனங்களும் ஏற்படமாட்டாதென எதிர்பார்க்கப்படுகிறது,

பருத்தித்துறை டிப்போவிலிருந்தும் நேராக வற்ருப்பளைக்கு பஸ் சேவை உண்டென்றும், இ, போ. ச. உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## 'கோயில்கள் சர்வகலாசாலைகள்'

மீசாலை, வெள்ளி

''சமயப் பிரசங்கங்கள், புராணபடலம், இசைநிகழ்ச்சிகள், பரதநாட்டியம், மேளக்கச்சேரிகள் ஆதியன சைவக்கோயில்களில் இடம்பெற்றமையால் கோயில்கள் கலாக்ஷேத்திரங்களாக விளங்குகின்றன. முதற்றரமான சிற்பம், ஓவியம் இன்றும் தேவாலயங்களிலே தான் உண்டு. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளையும் வளர்க்க ஏற்ற இடம் கோயில்கள் தான். புராதன காலங்களில் கோயில்கள் சர்வகலாசாலைகள் போன்று புராணபடனத்திற்கும், விரிவுரைகளுக்கும் முதலிடம்கொடுத்தன. இம்மரபைப் பேணவேண்டியது மக்களாட்சியில் மக்கள் கடமையாகும்.'' இவ்வாறு கலவெட்டித்திடல் கண்ணகை அம்மன்கோயிலில் அமைக்கப்பட்ட அரங்கில் நடைபெற்ற முத்தமிழ் கலைவிழாவில் தலைமை வகித்து உரையாற்றிய திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினுர்.

திரு. சுப்பிரமணியம் பேசுகையில் தமிழ்மன்னர் ஆட்சியில் மன்னர்களே புலவர்களை ஆதரித்துத் தாமே கலைநிகழ்ச்சிகளிற் பங்கெடுத்தனர் என்றும், பாரத நாட்டில் பல நகரங்கள் சைவக்கோயிலைச் சுற்றியே அமைக்கப்பட்டன என்றும் கூறினுர்.

விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சொந்த மொழியில் கல்விப் போதனை

### ஜி. ஜி. தகவல்

கொழும்பு, வெள்ளி

'ஒருவர் தனது சொந்த மொழியில் பேசுவதற்கும், கல்வி கற்பதற்கும் உள்ள உரிமையை தேசிய அரசாங்கம் மறுக்காது'.

நேற்று கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் நடைபெற்ற ஜாயா ஞாபகார்த்த விழாவின் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கும்போது யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அட்டொர்னி ஜெனரல் ஜனுப் ஏ. சி. எம். அமீர் பேசும்போது, ஸாகிராக் கல்லூரி முன்னைய பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்ற நம்பிக்கை யிருப்பதாகத் தெரிவித்தார்.

## தமிழ்மொழிச் சட்ட அமுல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணக் கச்சேரியிலும், யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய அரசாங்க அலுவலகங்களிலும் தமிழ்மொழிச் சட்டப் பிரமாணங்களை அமுல்நடத்துவதற்கு இதுவரை என்னென்ன நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன என்ற விபரத்தை ஜூன் மாதம் முதலாந்தேதி நடைபெறவிருக்கும் யாழ் மாவவட்ட இணைப்புக்குழுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க ஒழுங்கு செய்யுமாறு கிளிநொச்சி எம் பி திரு. க பொ இரத்தினம் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

யாழ் கூட்டுறவுப் பகுதி, காணிப் பதிவுப்பகுதி ஆகியவற்றிலிருந்து ஆங்கிலம் தெரியாத தங்களுக்கு அறிவிப்புகளும், மறுமொழிகளும் ஆங்கிலத்திலேயே கிடைப்பதாகப் பொதுமக்கள் பலர் முறையிட்டிருப்பது பற்றியும் திரு. இரத்தினம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மிதிபலகைப் பிரயாணம்

### 20 ரூபா அபராதம்

கொழும்பு, வெள்ளி

மிதிபலகையில் பிரயாணஞ்செய்ததாக எம். லபீர் எல் கே. குமரதாஸா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. டேவிட் இருவருக்கும் தலா 20 ரூபா அபராதம் விதித்தார்.

## உதவிக் கமிஷனரை நியமிக்க

### எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

தமிழ்மொழி உதவிக் கமிஷனர் பதவிக்கு ஒருவரை விரைவில் நியமிக்குமாறு கிளிநொச்சி எம். பி. திரு. க. பொ. இரத்தினம் நீதி மந்திரி திரு. ஜயமான்னேக்கு அனுப்பியுள்ள தந்தி யொன்றில் கோரியுள்ளார்.

## ரூ. 17-50 இன்றேல் வேலைநிறுத்தம்

### அஸீஸ் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

தோட்டத் தொழிலாளர்களுக்கான விசேஷ வாழ்க்கைக்கிராக்கிப்படி ரூ 17-50 கொடுக்க முதலாளிமார் சம்மேளனம் இணங்காவிட்டால் ஜூன் 13-ல் வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்வதென நேற்று தலவாக்கொலையில் கூடிய ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவுசெய்துள்ளது.

தமது கோரிக்கைகளை அரசாங்கத்திடமும், முதலாளிமார் சம்மேளனத்திடமும் சமர்ப்பித்திருப்பதாகவும், முடிவு செய்வதற்குப் போதியளவு காலம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. ஏ. அஸீஸ் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

## நாட்டிலும் நகரிலும்

### சண்டை ஆரம்பம்

ஆமாம்! சண்டை இப்பொழுதே ஆரம்பித்துவிட்டது. இன்னும் கைகலப்பு ஏற்படவில்லையானுலும் சண்டையின் துவக்கம் இதுதான். இதிலிருந்து சொற்போர் நடக்கும். பிறகு மற்போர் வரும்.

14, 15ம் நூற்ருண்டுகளில் ஆங்கிலேயரும் ஸ்பானியரும் அமெரிக்காவில் ரத்தக் களரி உண்டுபண்ணினுர்கள், ஒல்லாந்தரும் போத்துக்கீசரும் ஆசியாவில் கோரத்தாண்டவம் புரிந்தனர்: எல்லாம் என்ன, இந்த மண்ணுசைதான். பூலோகத்தில் இனி பிடிக்கவேண்டிய ஒரு காக்கை உட்காரும் இடம் கூட இல்லை. பிற கோளங்களையும் கிரகங்களையும் பார்க்க வேண்டியதுதானே!

அந்த சண்டைதான் இப்போது ஆரம்பித்திருக்கிறது. முந்திய யுத்தங்களில் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் வெடித்தன. இனி வரும் போரில் நாகாஸ்திரம், வருணுஸ்திரம் மோகனுஸ்திரம் முதலியன. பிரயோகிக்கப்படலாம். அவைதான் ஏ. குண்டுகள், எச்-குண்டுகள், என்-குண்டுகள், இன்னும் எத்தனை விதமான குண்டுகளோ!

சந்திர மண்டலம் யாருக்கு சொந்தமானது என்ற சண்டையைப் பற்றித்தான் சொல்லுகிறேன் சந்திரன் இப்பூமியிலுள்ள எல்லா நாடுகளுக்குமே சொந்தமானதாயிருக்க வேண்டும்; அதில் எந்த ஒரு நாடும் தனியுரிமை கோரலாகாது- என்று ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டுமென்று ஒரு யோசனையை அமெரிக்கா ஐக்கியநாடுகள் சபையில் கொண்டுவரப் போகிறது. இந்த யோசனையை ரஷ்யா என்னவிதமாக ஏற்றுக்கொள்ளும்? அதை அங்கிகரிக்குமா அல்லது நிராகரிக்குமா? ஐ. நா. சபையில் கொண்டுவரப்படும் எந்தயோசனையையும் நிராகரிக்கும் 'வீட்டோ' உரிமை ரஷ்யா உட்பட நான்கு வல்லரசுகளுக்கு இருக்கிறதல்லவா?

ரஷ்யா அந்த யோசனையை எதிர்த்தால் வருவது என்ன?

சந்திரனைஎட்டிப்பிடிக்கும் போட்டியில் இதுவரை ரஷ்யாவே வெற்றியடைந்துவந்திருக்கிறது. அதில் இறங்கும் முதலாவது மனிதனும் ஒரு ரஷ்யனுய் இருக்கும் பட்சத்தில், கொலம்பஸ் அமெரிக்கும் செய்ததுபோல, ரஷ்யக் கொடியை அங்கு நாட்டி தனது நாட்டிற்கே உரிமை கோருவானல்லவா? 'நான்தான் முதலில் கண்டேன். ஆகையால்எனக்குத்தான் சொந்தம்' என்ற இயற்கையான மனித சுபாவத்துக்கு அடிமையாகாமல் சந்திரன் உலகிலுள்ள எல்லா நாடுகளுக்குமே சொந்தம் என்ற பரந்த மனப்பான்மையை ரஷ்யா கடைப்பிடிக்குமா? உலக வரலாற்றை உன்னிப்பாகப் பார்த்தால் இது நடக்க முடியாத காரியம் என்றே தோன்றுகிறது.

சந்திரனை அடையும்போட்டியில் அமெரிக்கா ரஷ்யாவைவிட முன்னேற்றம் அடைந்திருந்தால் அது இப்படிப்பட்ட ஒருயோசனையைஐ. நா, சபையில் சமர்ப்பித்திருக்குமோ என்பது சந்தேகம். ரஷ்யா முன்னேறுகிறதே என்ற காரணத்தினுல் தான் அமெரிக்கா இந்த யோசனையை வெளியிட்டிருக்கிறதென்பது வெள்ளிடை மலையல்லவா?

ரஷ்யா அதற்கு சம்மதித்தால் சரி, அல்லாவிட்டால்...? (2-ம் கலம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருஜியின் 2-வது சிரார்த்த தினம்

புதுடில்லி, மே27

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் முதலாவது சிரார்த்ததினம் இன்றுநாடுபூராவும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது புதுடில்லியில் இன்று விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெற்றன,

நேருஜி தகனம் செய்யப்பட்ட சாந்தி வனத்தில் இன்று காலையில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, உப ராஷ்டிரபதி டாக்டர் ஸாகிர்ஷிசைன் ஆகியோர் உட்பட மத்திய மந்திரிகளும் பிரமுகர்களும் வெளிநாட்டு தூதுவர்களும் கலந்து கொண்டனர்.

நேருஜி சமாதி மீது உப ராஷ்டிரபதி, சிவப்பு நிற ரோஜா மலர்களைக்கொண்ட மலர் வளையமொன்றைச் சாத்தினார்.

ஏராளமானவர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு பிரார்த்தனை நடத்தினர்,

அகமதாபாத்தில் நேருஜி நினைவு தினம் இன்று குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டது.

சென்னையில்பல விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

வெளிநாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களிலும் நேருஜி மறைந்த தினம் கொண்டாடப்பட்டது.

# இந்திரா

கான்பரா, மே 27

ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாக இங்கு அறிவிக்கப்பட்டது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் பிரதமர் இந்திரா இங்கு விஜயம் செய்வார்என்று எதிர்பார்க்கப்படுகிறது. (பி.டி.ஸி)

# மன்னர் பற்றி தகவலில்லை

கம்பாலா, மே 27

புகண்டாமன்னரின்அரண்மனை உகண்டா துருப்புகளின் கைவசம் தொடர்ந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கபாகா மன்னரின் நிலை பற்றி சரியான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. மன்னர் இப்பொழுது எங்கிருக்கிறார் என்பது மர்மமாக விருக்கிறதென்று உகண்டா அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஐ. அ. குடியரசுக்கு ரஷ்யா ஆயுத உதவி

## உதவித் தளபதி பெருமிதம்

செய்ரோ, மே 27

ஐக்கியஅரபுக்குடியரசுக்கு தேவையான சகலவிதமான ஆயுதங்களையும் வழங்க சோவியத் யூனியன் எப்பொழுதும் தயாராகவிருப்பாக எகிப்திய மத்திய கிழக்குச் செய்திஸ்தாபனம் வெளியிட்ட செய்தி ஒன்று கூறுகிறது

இவ்விபரத்தை ஐக்கிய அரபுக் குடியரசு அரசாங்க தலைவர் ஒருவர் தெரிவித்ததாக இச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபுக் குடியரசு முதலாவது உப ஜனாதிபதியும் ஆயுதப்படைகளின் உதவித் தளபதியுமான பீல்ட் மார்ஷல் அப்துல் ஹகிம் அமீர் ஐக்கிய அரபுக் குடியரசு துருப்புக்கள் மத்தியில், இஸ்ரேலுக்கு அமெரிக்கா நவீன ஆயுதங்களை வழங்குவது குறித்து ஐ. அ. குடியரசு கவலைப்படவில்லை என்று கூறினார்.

'சோவியத்யூனியன் தான் எமது ஆயுத நாடு. எமக்குத் தேவையான சகல ஆயுதங்களையும்தாராளமாக வழங்க ரஷ்யா தயாராகவிருக்கிறது இஸ்ரேலிலும் பார்க்க ஐ அ குடியரசு வலிமை மிக்கதாக இப்பொழுது இருக்கிறது' என்றும் அவர் கூறினார்.

(பி டி ஸி)

# திருக்குறள் ஆங்கிலப் பதிப்பை ஐ. நா. நிதியில் வெளியிடுக

## பொதுக் காரியதரிசிக்கு வேண்டுகோள்

ரங்கூன், மே 27

திருக்குறள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாயினும் ஐ. நா, கல்வி, கலாச்சார, விஞ்ஞானக் குழு சார்பில் சிறந்த ஆங்கிலப் பதிப்பொன்றை வெளியிட வேண்டுமென கம்பைத் தனவைசியர் கல்விக் கழகம் ஐக்கிய நாடுகள் பொதுக்காரியதரிசி திரு. யுதாண்டிடம் கோரியுள்ளது.

இக்கழகம் அண்மையில் பர்மிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பதிப்பிக்கப்பட்ட திருக்குறள் பிரதி ஒன்றையும் திரு. யுதாண்டுக்கு அனுப்பிவைத்துள்ளது.

தமிழ்மறையான திருக்குறள் இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

# பீகிங் வாழ்த்து

பீகிங், மே 27

ஆப்கானிஸ்தான் தேசிய தினத்தை முன்னிட்டு சீனத் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்திருப்பதாக சீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

(பி. டி. ஸி)

ரயில்விபத்து

# மாணவர் தொகை 22 ஆக அதிகரிப்பு

சென்னை, மே 27

நேற்று அதிகாலை நிகழ்ந்த பங்களூர் — பூனா கடுகதி ரயில் விபத்தில் மாண்டவர்கள் தொகை இருபத்தியிரண்டாக அதிகரித்துள்ளது.

காயமடைந்த 26 பேரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரயில் விபத்துக்குப் பலியானவர்களில் ஐவரின் சடலங்கள் மட்டுமே இதுவரை அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில்விபத்தில் ரயில் சாரதியும் இரண்டு சக ஊழியர்களும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். இவ்விபத்து குறித்து திங்கட்கிழமை விசாரணைகள் நடைபெறும்.

# பாக். வர்த்தகத் தடையை இந்தியா அகற்றியது

புதுடில்லி, மே 27

இந்திய—பாகிஸ்தான் நெருக்கடியின்போதுபாகிஸ்தான் மீது இந்தியாவினால் விதிக்கப்பட்ட வர்த்தகத் தடை இப்பொழுது தளர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடனான வர்த்தகஉறவுகளைவிருத்திசெய்ய இந்தியா விரும்புகிறதென்றும் இதன் காரணமாகவே தான் பாகிஸ்தான் மீது விதிக்கப்பட்டிருந்த வர்த்தகத் தடை அகற்றப்பட்டுள்ளது என்றும் இந்திய அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

இந்திய—பாகிஸ்தான் வர்த்தக உறவுகளை அபிவிருத்தி செய்வது பாகிஸ்தான் கையில்தான் தங்கியிருக்கிறதென்றும் டாஷ்கண்ட் பிரகடனத்தின் நோக்கங்களை இந்தியா செயல்படுத்திவருகிறதென்றும் அவர் மேலும் கூறினார்

# ஸொனி லிஸ்டனே வலிமைமிக்கவர்

## காஸியஸ் கிளே தகவல்

கெய்ரோ, மே 27

இங்கு வந்துள்ள உலக அதிபார குத்துச்சண்டை வீரர் காஸியஸ் கிளே (மொகமட்அலி) லெபனுலுக்கு இரண்டு நாள் விஜயம் செய்யவிருக்கிறார்.

காஸியஸ்கிளே, ஞாயிற்றுக்கிழமை அலெக்ஸாண்டிரியாவிலும் செவ்வாய்க்கிழமை கெய்ரோவிலும் இரு காட்சி குத்துச்சண்டைப் போட்டிகளில் கலந்து கொள்வர்.

தமது சாம்பியன் அனுபவம் குறித்து காஸியாஸ் கிளே நிருபர்களிடம் தெரிவிக்கையில், இதுவரை நடைபெற்ற 'சாம்பியன்' போட்டிகளில் ஸொனிலிஸ்டன் தான் மிகவும் வலிமை மிக்கவர் என்று குறிப்பிட்டார்.

ஸொனிலிஸ்டனுடன் நடைபெற்ற 'சாம்பியன்' மோதலில் முதலாவது சுற்றிலேயே கிளே அவரை வீழ்த்திவெற்றிகண்டதுவாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஸொனிலிஸ்டனுடன் நடைபெற்றது கிளேயின் இரண்டாவது சாம்பியன் போட்டியாகும். (பி டி ஸி)

# மலேசியா தகராறு

கோலாலம்பூர், மே 27

இந்தோனேஷிய இராணுவ தூதுகோஷ்டியொன்று இன்று கோலாலம்பூர் வந்து சேர்ந்தது.

மலேசியத் தகராறு சம்பந்தமாக இவர்கள் மலேசிய அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்கள்.

மலேசியத் தகராறு

# டாக்டர் மாலிக் விஜயம் திடீரென ஒத்திவைப்பு

ஜாகர்த்தா, மே 27

இன்று பாங்காக்கு விஜயம் செய்யவிருந்த இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் தமது விஜயத்தை ஞாயிற்றுக்கிழமை வரை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

மலேசிய நெருக்கடி சம்பந்தமாக மலேசிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸாக்குடன் பேச்சக்கள் நடத்துவதற்காக இன்று அவர் தாய்லாந்து தலைநகர் பாங்காக்குச் செல்லவிருந்தார்.

மலேசியாவில் இப்பொழுது சுற்று விஜயம்செய்யும் தாய்லாந்து வெளிநாட்டு மந்திரி தனட்கோமன் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை தான் தாய்லாந்து திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரியின் பாங்ஹாக் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்கும் இதுவே காரணம் எனக் கூறப்படுகிறது.

டாக்டர் மாலிக் நேற்றுப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கையில், அதிபர் சுகர்ணோ தம்மை அழைத்து ஆசி கூறியதாகவும், 'மபச்சுக்கள் வெற்றிபெறவேண்டுமென்று நம்புகிறேன்' என்று தம்மிடம் சுகர்ணோ தெரிவித்திருந்ததாகவும் கூறினார். (பி டி ஸி)

# விசேஷ ரயில் சேவை

கொழும்பு, வெள்ளி

போசன் பண்டிகையை முன்னிட்டு இலங்கை புகையிரதப் பகுதி 38 விசேஷ புகையிரதங்களை சேவைக்கு விடத் தீர்மானித்துள்ளது. அநுராதபுரம், மகியங்கனை திஸமகாரமை ஆகிய இடங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்காகவே இந்தஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இ. போ, ச. இணைப்புச் சேவைகளை நடததவும் தீர்மானித்துள்ளது.

வியட்னும் யுத்தம்

# ஒருவாரத்தில் மட்டும் 1,617 பேர் பலி!

சைகோன், மே 27

கடந்த ஆறு மாத காலத்தில் கடந்தவாரத்தில் தான் தென்வியட்னுமில் அதிக எண்ணிக்கையில் அமெரிக்கத் துருப்புகள் மாண்டனர் என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் இங்கு தெரிவித்தார்.

மே மாதம் 21-ந் திகதியுடன் முடிவடைந்த ஒரு வார காலத்தில் 146 அமெரிக்கர் பலியானார்கள் என்றும் 820 அமெரிக்கர் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார்.

ஒரு வார காலத்தில் 236 தென்வியட்னும் துருப்புகள் பலியானார்கள். 84 துருப்புகளைக் காணவில்லை. இவ்வாரத்தில் மட்டும் 1,235 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்'' என்றும் அவர் தெரிவித்தார். (பி டி ஸி)

# வாடகை அலவன்ஸ் கூட்ட கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு, கண்டி, திருகோணமலை, நுவரேலியா ஆகிய இடங்களில் கடமையாற்றும் அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படும் வீட்டு வாடகைப்பணம் போன்று (திருமணமானவருக்கு 17 வீதமும் ஏனையோருக்கு எட்டரைவீதமும்) வடமாகாணத்தில் கடமையாற்றும் அரசாங்கசேவை ஊழியருக்கும் வழங்குமாறு அரசாங்க இலிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை நிதியமைச்சரைக் கோரியுள்ளது.

தற்போது வடமாகாணத்திலுள்ள அரசாங்க சேவை [illegible] வருக்கு வீட்டுவாடகைப் பணமாக 12வீதமும் ஏனையோருக்கு 6 வீதமும் வழங்கப்படுகிறது.

# காலி துறைமுகத்தை மந்திரி பார்வையிட்டார்

காலி, வெள்ளி

கடந்த ஒரு மாதகாலமாக எதுவித வேலைகளும் நடைபெருத காலி துறைமுகத்துக்கு உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயக்கா துறைமுக கூட்டுஸ்தாபன உப தலைவருடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

துறைமுகம் தேசியமயமாக்கப்படுமுன் வருடத்திற்கு 600 கப்பல்கள் வந்ததாகவும் தேசியமயமாக்கப்பட்டபின் இந்த எண்ணிக்கை அறுபதாக குறைந்ததாகவும் தற்பொழுது மாதத்திற்கு ஒரு கப்பல் மட்டுமே வருவதாகவும் மந்திரி தகநாயக்கா கூறினார்.

# திருமதி விஜயலட்சுமி

கான்பரா, மே27

தற்பொழுது ஆஸ்திரேலியாவில் சுற்றுவிஜயம்செய்து வரும் திருமதி விஜயலட்சுமி பண்டிட், தமது சுற்றுப் பிரயாணத்தின் ஒரு பகுதியை சுகயீனம் காரணமாக ரத்துச்செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் விருந்தினராக இங்கு வந்துள்ள திருமதி [illegible] ஆஸி பிரதமர் திரு. ஹரோல்ட் ஹோல்டுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

(பி,டி.ஸி )

# இளைஞனுக்கு மரணதண்டனை

மாஸ்கோ, மே 27

இரண்டுபேரை கத்தியால் தாக்கிய குற்றத்துக்கா பத்தொன்பது வயது இளைஞன் ஒருவனுக்கு ருஸ்டொவ் சோவியத் நகர நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. (பி.டி.ஸி)

# ஜீவனும்சம் கட்டத் தவறியவருக்கு சிறை

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை-கரம்பன் வாசியான எம். நடராசா என்பவர் அவரது மதுரம்மாவிற்கு மூன்று மாதம் ஜீவனும்சம் கட்டத்தவறியமைக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ரி. ஜே இராசரத்தினம் மூன்று மாதச் சிறைத்தண்டனை விதித்தார்,

# சங்கீதபூஷணம்

புங்குடுதீவு, வெள்ளி

1966ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீதபூஷண இறுதித்தேர்வில் புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த பொன். சுந்தரலிங்கம் முதல்வராகத் தேறியுள்ளார்.

இவர் 4 ஆண்டுகள் அண்ணாமலை நகரில் தங்கியிருந்து இசைப் பேராசிரியர்களிடம் முறையாகச் சங்கீதம் பயின்று பல கச்சேரிகளும் நடத்தியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈழம்தான் எனக்கு தமிழின் இனிமையை ஊட்டியது"

## பேராசிரியர் வெள்ளை வாரணனர் விளக்கம்

### இளங்கோவடிகள் சைவரா?, சிறுகதை தமிழை வளர்க்குமா?

"ஈழம் பெற்றெடுத்த யாழ். நூல் ஆசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார் தான் என்னைத் தமிழுடன் இணைத்தார்கள்; ஈழம் தான் எனக்குத் தமிழின் இனிமையை ஊட்டியது" என்று பெருமையாக, தனக்கே உரிய அழகு வார்த்தைகளால் சொன்னர், அண்ணமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறைத் துணைப் பேராசிரியர் வித்துவான் க. வெள்ளைவாரணனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்காக வந்திருந்த திரு. வெள்ளைவாரணனரை அவர் தங்கியிருந்த வித்துவான் க. கி நடராசன் இல்லத்தில் சந்தித்தேன்.

மறுநாள் அதிகாலை விபுலானந்த அடிகள் பிறந்த மட்டுநகருக்கு அவர் புறப்பட்டுப்போக இருந்ததால், வந்த களைப்பும், வைபவத்தில் பேசிய அலுப்பும் தீருவதற்கு முன்னலே, சந்தித்துப் பேசிய நேரம் இரவு பத்துமணிக்கு மேலாக இருந்த பேக்திலும், அன்பு முகம் காட்டி, வரவேற்று கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அடக்கமாகப் பதில் சொன்னர்.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக விபுலானந்த அடிகளார் இருந்த சமயத்தில், தான் அவரின் சிஷ்யராக இருந்து கல்வி பயின்றதாக சொன்ன அவர் "என்னை இப்படியான நிலைக்குக் கொண்டு வந்ததே சுவாமிகள்தான்" என்று கூறினர்.

பேட்டி கண்டவர்

— ராஜகோபால் —

அவர் பேசியதிலிருந்து விபுலானந்த அடிகளார் மீது அவர் கொண்டுள்ள பக்தியும், மதிப்பும் தெரியக் கூடியதாக இருந்தது.

சேக்கிழார் வைபவத்தில் அவர் பேசிய பேச்சு சம்பந்தமாக ஒரு கேள்வியைக் கேட்டேன்.

"இளங்கோ அடிகளார் எச் சமயத்தையும் சார்ந்தவரல்லர் என்று சிலப்பதிகாரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள ம. பொ. சிவஞான கிராமணியார் சொல்கிறரே, ஆனல் நீங்கள் இளங்கோ அடிகளார் சைவர் தான் என்று தெரிவித்துள்ளீர்கள் அப்படியானல் அடிகளார் சைவர்தான் என்று நீங்கள் எக்காரணத்தைக் கொண்டு கூறுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு திரு. வெள்ளை வாரணனர் விரிவான விளக்கமொன்றைத் தந்தார்.

"ம. பொ. சிவஞான இராமணியர் சொல்கின்ற கருத்துப் பற்றி நான் எவ்வித அபிப்பிராயமும் சொல்லவில்லை. ஆனல் கிராமணியார் சிலப்பதிகாரத்தின் மீது அளவு கடந்த பக்தியும், மதிப்பும் வைத்திருக்கிறரே என்பதற்காக அவர் சொல்கிற கருத்து சரியென்றும் கூற முடியாது.

### இளங்கோ சைவர்தான்

"காவியத்தைப் படைப்பவர்கள் தாம் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை தெட்டத்தெளிவாகக் குறிப்பிட மாட்டார்கள், சிலப்பதிகாரத்தில் சமணம், சைவம் எல்லாமே போற்றப்பட்டுள்ளது. ஆனல், இளங்கோ அடிகளார் தமது சகோதரன் — செங்குட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா தோற்றது

லண்டன், மே 27

ஹோலந்தில் நடைபெற்ற சர்வதேச ஹாக்கிபோட்டியில் ஒலிம்பிக் 'சாம்பியனை' இந்தியாவை ஹோலந்து 1—0 கோளால் தோற்கடித்தது.

இக்கோலை ஆரிடி கெயிஸர் போட்டார் இப்போட்டியை 4,500 பேர் பார்வையிட்டனர். (பி.டி.வி)

## காரைநகருக்கு மின்சாரம்

காரைநகர், வெள்ளி

காரைநகர் பகுதிக்குவிரைவில் மின்சார விநியோகம் அளிக்கப்பட இருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் இப்பொழுது மின்சாரக் கம்பங்கள் நிறுவும்வேலை ஆரம்பமாகஇருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## தேவை

சமையலறை உதவியாளர், தோட்ட வேலை செய்யும் பையன்கள், அறைப்பணிப் பையன்கள் உடனே தேவை.

புளூ றிபன் ஹோட்டல், யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 400

## அறிவித்தல்

### கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கலண்டர், டயறி உற்பத்தியாளருக்கு

1967-ம் ஆண்டிற்குகலண்டர், டயறி உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் கடதாசியின் அளவை இக்கந்தோரில் கிடைக்கக்கூடிய படிவத்தில் நிரப்பி அனுப்பும்படி, எல்லா கலண்டர், டயறி உற்பத்தியாளரும் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பங்களாவது, 1966-ம் ஆண்டு ஜுன் மாதம் 7-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ, கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

**பொது முகாமையாளர்**

கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி,
கொழும்பு-1
22-5-1966. 430

## தாயகம் புறப்பாடு

ரங்கூன் மே 27

1161 பர்மா இந்தியர்கள் இன்று ரங்கூனைவிட்டு தாயகம் புறப்பட்டனர்.

**அரசாங்க கேள்விப்பத்திரங்கள்**

**வவுனியா கச்சேரி**

என் 1062— 1-7-66 தொடக்கம் 30-6-67 வரைக்கும் வவுனியா மாவட்டத்திலுள்ள கள்ளுத்தவறணைகளில் கள்ளு விற்கும் உரிமை 3-6-66-இல் விற்கப்படும்.

**திருகோணமலைக் கச்சேரி**

என் 1093— 1-7-66 தொடக்கம் 30-6-67 வரைக்கும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கள்ளுத் தவறணைகளில் கள்ளு விற்கும் உரிமை 5-6-66-ல் விற்கப்படும்.

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

என் 1081-செங்கலடி உப-பிரிவிலுள்ள கித்துள்வெவா குளத்தில் பிரதான வாய்க்கால் வெட்டுதலும், வெள்ளத்தடுப்பு கட்டு கட்டுதலும். கேள்விகள் முடிவு திகதி 14-6-66.

என் 1083—கல்முனை உப-பிரிவில் கடுக்காமுனை விநியோக வாய்க்கால் அமைத்தல் (1) 3-ம் கட்டையிலிருந்து 3 கட்டை 19 சங்கிலி வரை (2) 3 க. 19 சங். தொடங்கி 3 க. 35 சங். வரை (3) 3 க. 35 சங். தொடங்கி 4 கட்டை வரை (4) 4 கட்டையிலிருந்து 4 க. 24 சங். வரை (5) 4 க. 24 சங், தொடங்கி 4 க. 30 சங். வரை (6) 4 க. 30 சங்கிலியிலிருந்து 4 கட்டை 40 சங்கிலி வரைக்கும். (7) நவற்கிரி அணைக்கட்டில் வலதுபுறவான் கல்கட்டு கட்டுதல். கேள்விகள் முடிவு திகதி 21-6-66.

என் 1094—முல்லைத்தீவு உப-பிரிவில் முத்துஐயன் குளக்கட்டு திட்டத்தின் கீழ் வேலைகள். கேள்விகள் முடிவு திகதி 21-6-66.

இதன் முழு விபரங்களுக்கும் 27-5-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகலகச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும். உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 2818

## திருவிழா

யாழ்ப்பாணம், சனி

சித்தங்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் ஏழாந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெற இருக்கிறது.

ஃ ஃ ஃ

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் கோவில் 12-ந்திருவிழா இன்று நடைபெற இருக்கிறது.

## திருமணப்பதிவு இலவசம்!

யாழ்ப்பாணம், சனி

யுவதிகளே! உங்களுக்கு திருமண நிச்சாயார்த்தம் முடிந்துவிட்டதா? அப்படியானால் ஆகஸ்ட் மாதத்தில் உங்கள் திருமணப் பதிவை வைத்துக்கொண்டால் திருமணப்பதிவு இலவசமாகவே பதிவுகரர் கட்டணம் எதுவுமின்றி பதிவு செய்யப்படும். ஆனால் ஒன்று 'கூறை'க்கு பதிலாக நீங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறிச் சேலை ஒன்றைக் கட்டிக் கொள்ளவேண்டும்.

சுதேசி இயக்க வாரத்தையொட்டி உள்நாட்டுச் சேலை உடுத்திவரும் மணப்பெண்களின் திருமணப் பதிவை இலவசமாக நடத்துமாறு கொழும்பு திருமணப்பதிவுகாரர் திரு ஜி.பி காரியவாசம் விடுத்த வேண்டுகோளை யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பதிவுகாரர்கள் ஏற்றுள்ளார்கள்.

## 'ஆங்கிலம் தேசிய மொழியல்ல'

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி போதிப்பதற்கு அடுத்த வருடம் முதல் மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஆங்கிலம் தேசிய மொழிகளில் ஒன்ருக இருக்க வில்லையென்றும், இதனால் மேலதிக செலவு அரசாங்கத்திற்கு ஏற்படுவதாகவும், இதன் காரணமாகவே ஆங்கிலத்தை போதனு மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் திட்டம் கைவிடப்பட்டதாக கல்வி அமைச்சை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

# வரி விளம்பரம்

## தேவை

மனேச்சர்

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மனேச்சர் தேவை. தராதரங்கள் J. S. C. வகுப்பு சித்தியெய்தியதுடன், கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை சித்தியெய்திய தராதரமும் வேண்டும். பிணைப்பணம்: ரூபா 1000/-. ரொக்கமும், ஆதனப்பிணையும்: ரூபா 2000/- கொடுக்கவேண்டும். சம்பளம்: ரூபா 100/- (அலவுன்ஸ் உட்பட). விண்ணப்பங்களைக் காரியதரிசி, புலோலி கிழக்கு சந்தாதோட்டம் ப. நோ. கூ. சங்கம், உத்திராவத்தை, பருத்தித்துறை. என்ற விலாசத்துக்கு 31-5-63க்கு முன் அனுப்பி வைக்கவேண்டும். 501

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய வுபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரனனந்தர், கைலாசபிள்ளையார் கேவுாலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

காணி

யாழ்ப்பாணம் பிரவுண் வீதி 5-ம் ஒழுங்கையில் 5 1/2 பரப்பு 3 குழி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். ஜெயசிங்கம், 550/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 399

கார்

இரண்டு கதவுடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய CN இலக்க மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. எகபா (f)வி அன்கோ லிமிட்டெட், "லொக்கேட் மில்ஸ்", கொழும்பு-12, என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 390

கார்

4 ஸ்ரீ 3000 இலக்கத் தொடருடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய இரண்டு வோக்ஸ் வகன் கார்கள் விற்பனைக்குண்டு. எகபா (f) வி அன் கோ லிமிட்டெட், "லொக்கேட்மில்ஸ்" கொழும்பு-12 என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 391

## இடதுசாரி ஐக்கிய முன்னணி

கொழும்பு, வெள்ளி

எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பொதுத் திட்டத்தின் கீழ் செயல்பட, சிறீலங்கா சுதந்தரக் கட்சி, சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை முடிவு செய்துள்ளன. மூன்று கட்சிகளையும் கொண்ட ஓர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய முன்னணியின் ஆரம்ப பிரசார நடவடிக்கைகளுக்கும் பிரசார கூட்டங்கள் ஒழுங்கு செய்வதற்கும் பொறுப்பாக சமசமாஜக் கட்சி உதவி காரியதரிசி நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் ஜுலை மாதம் 8-ம் திகதி குருநாகலையில்நடைபெறும்.

## சனசமூகநிலைய திறப்புவிழா

உடுத்திரபுரம், வெள்ளி

சந்திரோதய சனசமூக நிலைய திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. கரைச்சிப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எச். ஈ. புள்ளநாயகம் சனசமூக நிலைய மண்டபத்தை திறந்துவைத்தார்.

கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. க. சரவணமுத்து, குமார் ஆகியோர் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினர்.

## கூரை வேயும் செலவில் 20% சேமிக்க

## புதிய புரட்சிகரமான இலகு பார



## லயனெட் எல். டபிள்யூ.

பொப்பியூலர் சிக்ஸ்

## அஸ்பெஸ்டோஸ் கொறுகேட்டெட் ஷீட்டுகளை உபயோகியுங்கள்

* வேறெந்தக் கூரை வேயும் சாதனத்தையும் விட விலைகுறைந்தது.
* கூரை வேயும் செலவில் 20% சேமித்து, உங்கள் தேசத்தின் வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்த உதவுங்கள்.
* உறுதியானது. வசைந்து கொடுப்பது. மிருதுவானது. எந்தக் கால நிலையிலும் குளுமையோடு இருப்பது.

இன்று கிடைக்கும் கூரைவேய் சாதனங்களில் சிக்கனமும் அதிபாவனை வன்மையும் வாய்ந்த லயனெட் எல். டபிள்யூ. என்று வற்புறுத்தி வாங்குங்கள்.

எமது மற்றெரு மதிப்பு வாய்ந்த உற்பத்திப் பொருள்.

ஸ்ரீ லங்கா அஸ்பெஸ்டோஸ் புரொடக்ஸ் லிமிட்.,
61, ஜெட்டவன வீதி, கொழும்பு-14.

CRANTS 10

## தேசியப்பற்று உடையவராயிருங்கள்

நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்

## குண்டசாலை அரிசியை

சாப்பிடுங்கள்.

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

**குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.**

ஏனென்றல் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

கொழும்பு விநியோகஸ்தர்:

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி

181, பழைய சோனக தெரு, கொழும்பு—12
தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கண்டி விநியோகஸ்தர்:

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.

கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:

செரல் புறடக்ட்ஸ் உற்பத்தி ஆலை
குண்டசாலை, குருதேனியா.
தொலைபேசி: 808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேசிய ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படாது"

## கண்டியில் பிரதமர் டட்லி

கண்டி, வெள்ளி

''இரத்தக் களரியின்றி தேசிய ஒற்றுமையை இந்த நாட்டில் ஏற்படுத்திவிட்டோம்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இலங்கையின் முதல் பிரதமர் திரு. டி.எஸ் சேனநாயக்காவின் உருவச்சிலை அடிக்கல் நாட்டுவிழாவில் பிரதமர் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த அரசாங்கம் பதவியிலிருக்கும்வரை தேசிய அரசாங்கத்தினுல் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட தேசிய ஒற்றுமைக்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படமாட்டாது என்றும் அவர்உறுதி தெரிவித்தார்

தேசிய சுதந்திரத்தை நாம் பெற்றுக்கொண்டாலும் பொருளாதார சுதந்திரத்தை நாம் பெற்றுவிடவில்லை. இச்சுதந்திரத்தை அடைய சிலகாலம் பிடிக்கலாம். இலகுவில் இதனைப் பெற்றுவிட முடியுமென்று எவரும் எதிர்பார்க்கமுடியாது என்றும் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா தெரிவித்தார்.

விவசாயத்தில் சுயதேவை பூர்த்திபெற வேண்டுமென்பதை காலஞ்சென்ற முதல் பிரதமர் வற்புறுத்திக் கூறியிருந்தார். அவரின் முயற்சியினுல்தான் இன்று நாம் இத்துறையில் ஓரளவு முன்நிற்கின்றோம்'' என்றும் பிரதமர் கூறினுர்.

கண்டி எம். பி.யும் உரை நிகழ்த்தினுர்.

### யாருடையது?

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஒரு அரிசிக் கூப்பன் புத்தகம் திரு. கே. சோமசுந்தரத்தினுல் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

### விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

ஏழாலை வடக்கைச் சேர்ந்தவரும், புன்னுலைக்கட்டுவன் அ. மி. பாடசாலைத் தலைமை ஆசிரியருமான செல்லப்பா சாமுவேல் வைரவநாதன் சென்ற 13ந் தேதி மல்லாகம் புன்னுலைக்கட்டுவன் ரோட்டால் வீடுநோக்கிச் செல்லுகையில் பஸ்ஸினுல் மோதுண்டு மரணமானது சம்பந்தமாக மேல்விசாரணை மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாணு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னுகம் பொலிஸார் சம்பந்தப்பட்ட பஸ்சாரதியான சபாபதி தம்பித்துரைக்கு எதிராகக் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்தார்கள். குற்றப்பத்திரிகையில் தம்பித்துரை கவலையீனமாக பஸ்ஸை ஓட்டிச்சென்று வைரவநாதன் மேல் மோதி அவருக்கு மரணம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது நீதிபதி எதிரிக்குக் குற்றப் பத்திரிகையை வாசித்துக் காட்டியபின் வழக்கை விசாரணைக்காக ஆடிமாதம் 5ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சுன்னுகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸி வீரசூரியாவின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்காளி தரப்பிலும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்துரையும் ஆஜரானுர்கள்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# நூல்நிலையக் கட்டடத்தில் வானெலி ஒலிபரப்பு நிலையம்

## மாநகர சபையுடன் ஒப்பந்தம்

## பண்ணைக்காணியும் கையளிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் வானெலி ஒலிபரப்பு நிலையமொன்றை நிறுவுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளின்பின் யாழ்ப்பாண பொதுஜன நூல் நிலையக கட்டடத்தில் மேல்மாடியை ஒலிபரப்பு நிகழ்ச்சி நிலயமாக தற்காலிகமாக உபயோகிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வானெலி ஒலிபரப்பு உப நிலையம் ஒன்றை நிரந்தரமாக அமைப்பதற்கான காணி பண்ணைக்குச் சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்டு அந்தக்காணி இலங்கை வானெலிப் பகுதியினருக்கு நேற்று யாழ்ப்பாண அரசாங்க அதிபரினுல் கையளிக்கப்பட்டது. இவ்வைபவத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. என். சிவஞானம், மற்றும் இலங்கை வானெலியைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் வானெலி ஒலிபரப்பு நிலையம் ஒன்று அமைப்பது பற்றி பூர்வாங்கமாகப் பரிசிலனைசெய்த வானெலி தொழில் நுட்ப, என்ஜினியர்குழு, யாழ்ப்பாணம் பொதுஜன நூல் நிலைய கட்டடத்தின் மேல்மாடியில் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை அளிக்கும் நிலையம் ஒன்றை தற்காலிகமாக அமைக்கலாமென்றும் கைதடியில் ஒலிபரப்பு அலை நிலையம் அமைக்கலாமென்றும் சிபார்சு செய்திருந்தது. பண்ணைக்குச் சமீபத்தில் நிரந்தரமாக ஒலிபரப்பு நிலையம் அமைக்கலாமென்றும் இக்குழு சிபார்சு செய்திருந்தது.

இச்சிபார்சுகளை ஏற்றுக்கொண்ட வானெலி விசாரணைக் கமிஷன் ஒலிபரப்பு நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டுமெனத் தனது அறிக்கையில் சிபார்சு செய்திருந்தது.

# மாஜி பொலிஸ்காரருக்கு 2 வருட கடுழியச்சிறை

## மோட்டார் கார் திருட்டு வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

கார் திருட்டு வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னுள் பொலிஸ் கான்ஸ்டபிள் அமரசேன தெனுவர என்பவருக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என். எம். ஜே. ராஜேந்திரம் நேற்று இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு படமாளிகையில் 1964-ம் ஆண்டு ஜனரி மாதம் 13-ந் திகதி இரவு படம் பார்க்கச்சென்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர் தமதுகாரை வெளியில் நிறுத்தி பூட்டிவிட்டுச் சென்று படம் முடிந்து வந்து பார்த்தபொழுது அவரது கார் திருட்டுப்போய்விட்டதென அறிந்து பொலிஸில் புகார் செய்திருந்தார். இதைத் தொடர்ந்து பொலிசார் மோட்டார் காரைக் கைப்பற்றியதுடன் பின்னர் அமரசேன தெனுவரையையும் கைதுசெய்து அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர்.

இவ்வழக்கு நேற்று மீண்டும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. என். எம். ஜே.ராஜேந்திரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஸி. எம். தர்மலிங்கம் ஆஜரானுர். எதிரி அமரசேன வழக்கறிஞர் எவரையும் நியமிக்காமல் தானே தமக்காக வாதாடினுர்

விசாரணை முடிவில் நீதிபதி எதிரிக்கு இரண்டு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்தார்.

### சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கை வந்துள்ள சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. பாலசுப்பிரமணியன் எம். ஏ. இன்று பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி கோப்பாய் வாலிபர் சங்கம் ஆகிய இடங்களில் சொற்பொறிவாற்றுவர்.

### நல்லையா வீதி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னுள் அங்கத்தவர்களில் ஒருவரும் நகர சபையின் தலைவராக முன்பு பதவி வகித்தவரும், மாநகர சபையின் இப்போதைய கட்டிடம்உருவாக பெரிதும் காரணமாக இருந்தவருமான திரு. ஆர். ஆர். நல்லையாவின் நினைவாக முதலாம் குறுக்குத்தெருவுக்கு இன்று காலை 10 மணிக்கு நல்லையா வீதி எனப்பெயர்சூட்டப் படவிருக்கிறது. மேயர் திரு. துரையப்பா புதிய பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைப்பார்.

### பரீட்சை முடிவுகள் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகின்றன.

மாணவர்கள் சிலருக்கு தையல்பாடத்தில்கூட சித்தி பெற்றிருப்பதாக பதிவு செய்யப்பட்டிருப்பதாக பாடசாலை அதிபர்கள் தமது புகாரில் தெரிவித்துள்ளனர்.

வடபகுதியிலிருந்தே இந்த புகார்கள் கூடுதலாக வந்திருக்கிறதென்று தெரிவிக்கப்பட்டது.

### ஈழம்தான் எனக்கு

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

வனைப் பற்றி ஒரு இடத்தில் பாடும்போது அவனது சிவபக்தியைச் சொல்கிருர். அதன் மூலம் இளங்கோ அடிகளார் ஒரு சைவர் என்பது புலனுகிறதல்லவா!''

#### தமிழ் மகாநாட்டில் வாரணனுர் கட்டுரை

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பேராசிரியர் வெள்ளை வாரணனுருடையவாரப்பா, டலின்தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை வாசிக்கப்பட்டது. ஆனுல் அவர்தான், அந்த மகாநாட்டில் கலந்து கொய்வதற்கு முடியாமல் போய்விட்டதாகச் சொன்னுர். வரும்படி அழைப்பு அனுப்பியிருந்தார்களென்றும், சில வசதிக்குறைவு காரணமாக அங்கு போகவில்லையென்றும் கூறினுர்.

தொல்காப்பியம் பற்றிய நூல்களும், திருமறை நூல்களும் பல எழுதி வெளியிட்டுள்ள வாரணனுர் சேக்கிழாரின் பெரியபுராணத்தின்மீது அளவு கடந்த பக்திகொண்டுள்ளார். பெரியபுராணத்திலுள்ள சில பாடல்களை மிகவும் அழகாக பாடி விளக்கம் தெரிவித்தார்.

''பெரியபுராணம் சைவர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்'' என்கிருர் எத்தொழில் செய்பவனுக இருந்தாலும், எப்படியான வாழ்க்கை நடத்துபவனுக இருந்தாலும் உளத்தால் ஆண்டவனை உண்மையுடன் நேசித்தால் கடவுள் அருள் கிடைக்கும் என்ற உயர்ந்த தத்துவத்தை எமக்கு உணர்த்தியிருக்கிருர் சேக்கிழார் பெருமான்'' என்று பெரிய புராணத்தின் சிறப்புப்பற்றி உணர்ச்சிபொங்கக்கூறினுர்.

''தற்போது சிறுகதை நாவல் போன்றவைகளில் சிரத்தைகாட்டி வருகிருர்களே, இவைகளால் தமிழுக்கு வளர்ச்சி யுண்டா? என்று ஒரு கேள்வியை திரு வாரணனுரிடம் கேட்டபோது இப்படியாகப் பதில் சொன்னுர்;-

''தமிழை எந்த முறையிலும் வளர்க்கலாம். சிறுகதை, நாவல்களால் ஏன் வளர்க்கமுடியாது? இந்தத் துறையிலீடுபடுபவர்கள் இறுதியாக பண்பட்ட தமிழ் உணர்ச்சியுள்ளவர்களாவார்கள் என்பது என் கருத்து. ஆனுல் இந்தச் சிறுகதை நாவல்களைப் படைக்கிறவர்கள் வரம்பு மீறிச் செல்லக்கூடாது. கீழ்த்தரமான ஆபாசமான கருத்துக்களை அதில் புகுத்தினுல் தமிழ் வளரும் என்று சொல்லமுடியுமா? ஆகையால் சிறுகதை,நாவல் துறைகளிலீடுபட்டிருப்பவர்கள் தமிழின் வளர்ச்சியைத் மனதில் வைத்து, வரம்பு மீறி போகாமல்செயலாற்ற வேண்டும்.''

அண்மையில் அண்ணுமலை பல்கலைக்கழகத்துக்குச் சென்று வந்த உடுப்பிட்டி எம் பி. திரு. சிவசிதம்பரம் இங்கு ஒரு கூட்டத்தில் பேசியது குறித்து ஒரு கேள்வியை தொடுத்தேன்.

''அண்ணுமலைப் பல்கலைக்கழகம் 'டப்பா' சங்கீதமயமாகிறதென்று எம். பீ. ஒருவர் சொல்கிருர். அப்படியா?'' என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில் இதுதான்.

''சங்கீதத்துறையில் ஈடுபடாத மாணவர்கள் அந்தச் சங்கீதத்தை விரும்புகிருர்களென்பதற்காக அப்படிச் சொல்லலாமா. அண்ணுமலையில் முறையாகத்தான் சங்கீதம் படிப்பிக்கப்படுகிறது. படிக்கும் மாணவர்களும் முறையாகத்தான் கற்கிருர்கள். எம். பி.யின் கருத்துத் தவறென்பதே என் அபிப்பிராயம்.''

இப்பொழுது
திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)
தீவொளி (நுவெரேலியா)
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்
இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ராமச்சந்திரன் வைஜயந்திமாலா
நடித்த
வாழ்க்கை

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

REGAL—JAFFNA
NOW SHOWING!
JACK PALANCE
ANITA EKBERG
in
THE MONGOLS
Supertotal Scope - Color

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 28ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org